## வால்பாறை நகராட்சியின் நகர்மன்ற கூட்டம் செப்டம்பர் மாதம் 25.09.2024-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு நகர்மன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள் விபரம்:

**முன்னிலை:திருமதி.செ.அழகுசுந்தரவள்ளி**

**நகர்மன்ற தலைவர்**

**பொருள்: 1**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித எண். 21627/2021/எம்3, நாள்.20.09.2021-ல் தமிழ்நாட்டில் உள்ள 14 மாநகராட்சிகள் மற்றும் 121 நகராட்சிகளின் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லாத நிலையில் உள்ளதால் மேலும், பல மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் மாதந்தோறும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க இயலாத நிலையும் காணப்படுவதால் அதுபோல, ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான பணப்பயன்கள் வழங்க இயலாத நிலை, சேமநலநிதி பங்களிப்புத்தொகை செலுத்த இயலாத நிலை சிக்கன நாணயச்சங்கம், ஆயுள் காப்பீட்டுக்கழகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின் பகிர்மானம் மற்றும் விநியோகக்கழகம் போன்ற நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய தொகை செலுத்த இயலாத நிலை, ஒப்பந்ததாரர்களுக்கு செலவுத்தொகை வழங்க இயலாத நிலை பல மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் காணப்படுவதால் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் நிலவி வரும் நிதி பற்றாக்குறைக்கான காரணம் ஆராயப்பட்டதில், மாநகராட்சி/ நகராட்சிகளில் வருவாயைக் கருத்தில் கொள்ளாமலும், வருவாயை பெருக்க எந்த நடவடிக்கையும் எடுக்காமலும், அதிகமான மூலதனப் பணிகள் மேற்கொண்டதே காரணம் என்பது தெரிய வருவதால், தமிழ்நாட்டிலுள்ள 14 மாநகராட்சிகள் மற்றும் 121 நகராட்சிகளில் நிலவி வரும் கடும் நிதி நெருக்கடிக்கானக் காரணங்களைப் பரிசீலித்து, மாநகராட்சி/நகராட்சிகளில் பொது நிதியின் கீழான பணிகள் செயல்படுத்தும் போது சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் ரூ.106.00 கோடி நிரந்தர வைப்புத்தொகையாக வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மாதந்தோறும் பணியாளர்களுக்கு ஊதியம், ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான பணப்பயன்கள், சேமநலநிதி, பங்களிப்புத்தொகை, சிக்கன நாணயச்சங்கம், ஆயுள் காப்பீட்டு கழகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்பகிர்மானம் மற்றும் விநியோக்கழகம் போன்ற நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் நாளது வரை நிலுவை ஏதும் இல்லை. மேலும், வால்பாறை நகராட்சி 217.87 சதுர பரப்பளவு கொண்ட மலைச்சார்ந்த பகுதியில் அமைந்துள்ளது, இந்நகராட்சி தென்மேற்கு

பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை என இரண்டு பருவமழை காலங்களிலும் வருடத்திற்கு சுமார் 8 மாத கால அளவிற்கு தொடர்மழை பொழிவினை எதிர்கொண்டு வரும் காரணமாக இயற்கை இடர்பாடுகள் ஏற்பட்டு குடியிருப்பு பகுதிகளின் அருகில் மண் சரிவு ஏற்பட்டு நீண்ட காலத்திற்கு முன்பு கட்டப்பட்ட தடுப்புச்சுவர்கள் பாதிக்கப்படுவதுடன் அதன் அருகில் உள்ள குடியிருப்புகளும் பாதிக்கப்பட்டு பொதுமக்களுக்கு பொருட்சேதம் ஏற்படுவதுடன் உயிர் சேதம் ஏற்பட காரணமாக அமைகிறது. மேலும், நடைபாதைகள் மற்றும் கழிவு நீர் கால்வாய்கள் அவ்வப்போது மிகவும் பழுதடைந்து பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பட்டு வருவதால் இந்நகராட்சியின் அமைவிடம், இந்நகராட்சி எதிர்கொண்டு வரும் இயற்கை இடர்பாடுகள், நகராட்சியில் நிலவும் பருவநிலை மற்றும் மழை பொழிவு ஆகியவற்றினை கருத்தில் கொண்டு பாதிப்புகளை தடுக்கும் பொருட்டு பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, பராமரிப்பு பணிகளை மட்டும், உடனுக்குடன் மேற்கொள்ள ஏதுவாக மேற்படி சுற்றறிக்கையிலிருந்து விளக்களித்து அனுமதி வழங்குமாறு ஒரு மனதாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களை கேட்டுக்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண்.1397/2024/இ1**

நகர்மன்ற தலைவர்

வால்பாறை

நகராட்சி

நகல் பணிந்து அனுப்பப்படுகிறது

1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள்
2. மாவட்ட ஆட்சித்தலைவர், கோவை அவர்கள்
3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்கள்

நகல்

1. ஆணையாளர் மேஜைக்கு
2. மேலாளர்
3. நகராட்சி பொறியாளர்